# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 12,101 — 1960 අප්‍රේල් 7 වැනි බ්‍රහස්පතින්ද — 7.4.1960**

12,101 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 7 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

**1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக்கட்டுப்பாட்டுச் சட்டம்**

**கட்டளை இலக்கம் 144**

1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 (1) (4) ம் பிரிவினல் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மொஹொட்ட லாகே டிங்கிரி பண்டா உணவு, வர்த்தக, வியாபார அமைச்சர் ஆகிய யான் இக்கட்டளையால் எவ்வித அரிசி, நெல், கோதுமை, கோதுமை மா அல்லது குரக்கன் முதலியவைகளை அட்டவணையின் இரண்டாம் பத்தியில் விவரிக்கப்பட்ட ஆளோ, ஆட்களோ வழங்கும் உத்தரவுச்சீட்டின் (பெர்மிட்) பேரில் தவிர, அதுவும் அவரால் வழங்கப்படும் ஆஞ்ஞைகளின்படி எந்நேரத்தில், எவ்விதம், எவ்விடத்துக்கு அவ்வரிசி, நெல், கோதுமை, கோதுமை மா, அல்லது குரக்கன் முதலியவைகளை எடுத்துச் செல்லக்கூடும் என்ற நிபந்தனைகளின் பேரிலும் தவிர, இதனோடிருக்கும் அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எத்துறைமுகத்திலிருந்தோ அல்லது இடத்திலிருந்தோ எடுத்துச் செல்லக்கூடாது எனத் தடை விதிக்கிறேன்,

கொழும்பு,
1960 ம் ஆண்டு ஏப்றில் மீ 6 ந் உ.

எம். டீ. பண்டா,
உணவு, வர்த்தக, வியாபார அமைச்சர்.

அட்டவணை

| பத்தி 1<br>துறைமுகம் அல்லது இடம் | பத்தி 2<br>அதிகாரச்சீட்டு வழங்கக்கூடிய ஆட்கள் |
|---|---|
| கொழும்பு .. .. .. | உணவுக்கட்டுப்பாட்டதிகாரி |
| காலி .. .. .. | காலி மாவட்ட அதிபர், காலி மாவட்ட பிரதி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி |
| யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை | யாழ்ப்பாண மாவட்ட அதிபர், யாழ்ப்பாண மாவட்ட பிரதி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி |
| திருகோணமலை .. .. .. | திருகோணமலை மாவட்ட அதிபர், திருகோணமலை மாவட்ட பிரதி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி |
| தலைமன்னர், மன்னர் .. .. .. | மன்னர் மாவட்ட அதிபர், மன்னர் மாவட்ட பிரதி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி |
| மட்டக்களப்பு .. .. .. | மட்டக்களப்பு மாவட்ட அதிபர், மட்டக்களப்பு மாவட்ட பிரதி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி |
| பேருவல, களுத்துறை .. .. .. | களுத்துறை மாவட்ட அதிபர், களுத்துறை மாவட்ட பிரதி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி |
| முல்லைத்தீவு .. .. .. | வவுனியா மாவட்ட அதிபர், வவுனியா மாவட்ட பிரதி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி |
| புத்தளம், கல்பிட்டி .. .. .. | புத்தளம் மாவட்ட அதிபர், புத்தளம் மாவட்ட பிரதி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி |
| நீர்கொழும்பு .. .. .. | கொழும்பு மாவட்ட அதிபர், கொழும்பு மாவட்ட பிரதி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி |

---

**1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக்கட்டுப்பாட்டுச் சட்டம்**

**கட்டளை இலக்கம் 145**

1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 (1) (5) ம் பிரிவினல் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மொஹொட்ட லாகே டிங்கிறி பண்டா உணவு, வர்த்தக, வியாபார அமைச்சர் ஆகிய யான் இக்கட்டளையால் இதனோடிருக்கும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட களஞ்சியத்தை எனது கட்டுப்பாட்டிற்குள் எடுத்துக்கொள்கிறேன்.

கொழும்பு,
1960 ம் ஆண்டு ஏப்றில் மீ 6 ந் உ.

எம். டீ. பண்டா,
உணவு, வர்த்தக, வியாபார அமைச்சர்,

அட்டவணை

சாமேர்ஸ் களஞ்சியம், கொழும்பு (பூந்தோட்டம்)

---

**1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக்கட்டுப்பாட்டுச் சட்டம்**

**கட்டளை இலக்கம் 146**

1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4(1) (6) ம் பிரிவினல் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மொஹொட்ட லாகே டிங்கிரி பண்டா உணவு, வர்த்தக, வியாபார அமைச்சர் ஆகிய யான் இக்கட்டளையால் நெல் அல்லது மற்றைய தானியம் அல்லது அத்தானியத்திலிருந்து தயாரிக்கப்பட்ட எவ்வித பொருளையும் பெரும்பாலாகவோ முழுமையாகவோ இலங்கையின் எல்லாப் பாகங்களிலுமுள்ள விற்பனையாளருக்கும் வியாபாரிகளுக்கும் வழங்கும் முறையைக் கையாளவும் பங்கீட்டளவை செய்யவும், அம்முறையில் வேண்டிய ஒழுங்குகளையும் பரிபாலனத்தையும் செய்யவும் இங்கு குறிக்கப்பட்ட திகதியிலிருந்தும் அதன் பின்னும் உணவுக்கட்டுப்பாட்டதிகாரிக்கு ஆஞ்ஞையிடுகிறேன்.

கொழும்பு,
1960 ம் ஆண்டு ஏப்றில் மீ 6 ந் உ.

எம். டீ. பண்டா,
உணவு, வர்த்தக, வியாபார அமைச்சர்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது